**இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் - 2017**

------------------------------------------------------------------------------------

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று தகுதிவாய்ந்த அலுவலருக்கு 2018 செத்தெம்பர் 28 ஆம் திகதி அனுப்பப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) ஒத்ததாகஇலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லதுபதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும்,நிதி நிலைமைக் கூற்று,விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கூட்டுத்தாபனத்தின் இடையறா வழியுரிமை

2016 மற்றும் 2017 ஆண்டுகள் இறுதியில் கூட்டுத்தாபனத்தில் முறையே ரூபா 525,639,091 மற்றும் ரூபா 494,151,362 எதிர்கணிய தேறிய சொத்து நிலமை காணப்பட்டது. மீளாய்வாண்டளவில் கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியினர் 39 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 09 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் கடந்தகால யுத்த சூழ்நிலை மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் மூடப்பட்டிருந்தன. கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளை பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வாடகைக்குவிடுதல் மற்றும் மீள்கட்டமைக்கும் செயன்முறையை துரிதமாக செயற்படுத்தும் முகமாக 2010 ஆம் ஆண்டிலிருந்து நிறுவனத்தின் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டு தகுதிவாய்ந்த அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்து பேணுதல் மீது இந்த விடயங்கள் பாதகமாக தாக்கம் செலுத்தியிருந்தன.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 02 பிரகாரம் முடிவுப்பொருள் இருப்புக் கிரயம் மற்றும் தேறிய நிகர பெறுமதி ஆகிய இரண்டு பெறுமதிகளில் குறைந்த பெறுமதியே பதிய வேண்டியபோதிலும், 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மொத்தமாக ரூபா 76,818,311 முடிவுப்பொருள் இருப்பு விற்பனை விலையில் கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 04 உற்பத்தி தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள் 2018 சனவரி 25 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், இந்த உற்பத்தி நிறுத்தப்பட்டமை தொடர்பிலும் வேஉட ஓட்டுத் தொழிற்சாலையும் அது அமைந்திருந்த நிலத்தைம் புதிய கைத்தொழில் செயற்றிட்டத்திற்கு வாடகைக்குவிடுதலுக்கு ஏற்புடைய பிரேரணை தொடர்பிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 150,000 வாகன வாடகை செலவினம் 2017 ஆம் ஆண்டின்வாகன வாடகை செலவினமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் கடைசி 02 மாதங்களுக்கு ஏற்புடையதாக செலுத்த வேண்டிய ரூபா 300,000 வாகன வாடகை செலுத்த வேண்டியசெலவினமாக கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு பொருட்டு கூட்டுத்தாபனம் கணக்காய்வுக் கட்டணம் பொருட்டு நிதியேற்பாடு செய்திருக்கவில்லை.

(இ) உற்பத்திக் கிரயத்தில் உள்ளடங்க வேண்டிய ஓடு உற்பத்திக்கான வா்த்தக உத்தரவுப்பத்திரக் கட்டணம் மற்றும் உற்பத்திச் செலவு மொத்தம் ரூபா 215,597 தொகை தாபன, நிருவாக செலவு ஆக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஓடு கொண்டுசெல்லும் முகமாக உறப்பட்ட மொத்தம் ரூபா 2,453,691 ஆன செலவு உற்பத்திச் செலவாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் 08 ஒப்பந்த ஊழியர்கள் பொருட்டு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 123,024 ஆன ஊழியர் சம்பளங்கள் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 751,540 மருத்துவ படி கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் செலவொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(எ) கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகம் பேணப்பட்டுவரும் கட்டடம் பொருட்டு மீளாய்வாண்டிற்கு ஏற்புடையதாக செலுத்த வேண்டிய கட்டட வாடகைகணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டினுள் மண் அகழ்தல் உரிமம் பெற்றுக் கொள்ளும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்துக்கும் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா 284,912 செலவினம் சொத்தொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(ஐ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உஸ்வெவ தொழிற்சாலையின் மொத்தம் ரூபா 16,802,930 ஆன விற்பனைப் பொருட்களுக்கான கிரயம் சரியாக இனங்காணப்படாமல் ரூபா 5,201,313 மறை பெறுமதியொன்றாக பதியப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டமையினால் ஆண்டின் மொத்த இலாபம் ரூபா 10,402,326 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின்படி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதி ரூபா 5,000,000 ஆன போதிலும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினால் சமா்ப்பிக்கப்பட்ட மீதி சான்றுபடுத்தல் கடிதத்தின்படி குறித்த பெறுமதி ரூபா 2,005,435 இருந்தமையினால் ரூபா 2,994,565 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 தொங்கல் கணக்கு

---

2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 2,737,166 ஆன தொங்கல் கணக்கின் வரவு மீதி இயைபான கணக்கு சரிசெய்யப்படாமல் பிடித்துவைக்கப்பட்ட இலாபத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ளசான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அவற்றைகணக்காய்வின்போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி<br>ரூ. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| (அ) காணியும் கட்டடமும் | 23,755,784 | உரித்து உறுதி உரிமங்கள் அல்லது சட்டபூர்வமான ஆவணங்கள் |
| (ஆ)வர்த்தக மற்றும் பிற கடன்படுநர் | 9,317,527 | கடன்படுநர்மீதிகளை சான்றுபடுத்தும் கடிதங்கள் மற்றும் கடன்படுநர் கோப்புக்கள் |
| (இ) ஓட்டுக் கடன் கணக்கு (இடர் கடன்) | 87,460 | நாளேட்டு பணவுறுதிச்சீட்டு மற்றும் குறித்த பணவுறுதிச்சீட்டுக்கான துணை சான்று |
| (ஈ) செலுத்த வேண்டிய வரி | 175,903,306 | வரி கோப்புக்கள்,வரி பொறுப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு போதிய எழுத்திலான சான்றுபடுத்தும் மற்றும் கணிக்கும் ஏடுகள் |
| (உ) பெற வேண்டிய வருமான வரி | 1,221,666 | |
| (ஊ) நிலையான சொத்துக்கள் | 104,513,418 | கணிப்பாய்வுச் சபை அறிக்கை |
| (எ) அறவிட முடியாக் கடன் | 741,207<br>452,478 | விரிவான அட்டவணை |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் மொத்தம்ரூபா 11,634,693 ஆன வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் 01 ஆண்டுக்கு குறைந்த கடன் மீதிகளின் மொத்தம்ரூபா 8,904,674 உம், 02 ஆண்டுகளுக்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,316,853 உம், 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 413,166 ஆகவும் காணப்பட்டதுடன், இந்த கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் மொத்தம் ரூபா 55,107,544 ஆன வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் 01 ஆண்டுக்கு குறைந்த மீதிகளின் மொத்தம் ரூபா 2,709,763 உம், 01 ஆண்டு முதல் 02 ஆண்டுகள் வரையிலான மீதிகளின் மொத்தம் ரூபா 1,635,154 உம், 02 ஆண்டுகள் முதல் 03 ஆண்டுகள் வரையிலான மீதிகளின் மொத்தம் ரூபா 500,000 உம், 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 50,262,627 ஆகவும் காணப்பட்டதுடன், இந்த நிலுவை கடன் மீதிகளை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

---

கீழே காணப்படும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | |
| (i) நிதி ஒழுங்குவிதி 135 | நிதிக் கட்டுப்பாடு தொடர்பிலான பணிகள் எழுத்தில் மாற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 138 | கொடுப்பனவுகளை சான்றுபடுத்தும் இன்வொய்ஸ்பத்திரங்கள் மற்றும் தொடர்புற்ற கோப்பு விபரம் பணவுறுதிச்சீட்டு சகிதம் சமர்ப்பிக்கப்படாமல் 08 கொடுப்பனவு பணவுறுதிச்சீட்டுக்களை பயன்படுத்தி மொத்தமாக ரூபா 555,013 செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதி ஒழுங்குவிதி 394 | ஒழுங்குவிதிபிரகாரம் செயலாற்றாது கூட்டு பெறுமதி ரூபா 1,592,187 பெறுமதியான 25 காசோலைகள் செல்லுபடியற்றதாக்கப் பட்டிருந்தன. |
| (ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றல் அறிக்கை 03 மாதங்களுக்கு ஒருதடவை மீளாய்வு செய்து காலாண்டு நிறைவடைந்து 30 நாட்கள் முடிவடைய முன்னர் பொது தொழில்முயற்சி திணைக்களத்திற்கும் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு ஏற்றவாறு செயலாற்றி இருக்கவில்லை. |
| (இ) 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 4 (பீ) ஆம் பிரிவு | இந்த சுற்றறிக்கைபிரகாரம் பதிவுசெய்யப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட வாகனங்கள் கையுதிர்ப்பு செய்யப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளில் உள்ள தற்போது பயன்படுத்தாத 10 வாகனங்கள் கையுதிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மொத்தம் ரூபா 38,884,097 பெறுமதியான காணி, கட்டடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதிசார் மீளாய்வு

------------------------------

### 3.1 நிதிசார் விளைவு

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் விளைவு ரூபா 37,077,618 தேறிய இலாபமாக இருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 12,500,267 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 24,577,351 ஆல் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் விற்பனை வருமானம் ரூபா 24,217,593 ஆல் குறைந்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 74,813,395 ஆல் குறைந்திருந்தமை மேற்படி அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வுசெய்கையில் 2014 ஆம் ஆண்டில் நட்டம் அடைந்திருந்ததுடன், 2013, 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் தேறிய இலாபங்கள் பெற்றிருந்தன. இருப்பினும், நிதிசார் விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் பொருட்டான தேய்மானம் ஆகியனவற்றை மீண்டும் சீராக்கும்போது கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 35,980,387 ஆன போதிலும், 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 10,978,743 வரை குறைந்திருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டில் ரூபா 51,538,247 ஆன பங்களிப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் ரூபா 111,216,265 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

-----------------------------------------------------------

கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதாசாரம் 2015 ஆம் ஆண்டில் 0.34 ஆக இருந்ததுடன், அவ்விகிதாசாரம் 2017 ஆம் ஆண்டளவில் 2.33 வரை துரித வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இருப்பு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 55,511,752 ஆல் அதிகரித்தமையும், 2016 ஆம் ஆண்டில் நடப்பு பொறுப்பொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்த ரூபா 176,263,306 ஆன செலுத்த வேண்டிய மொத்த வரிப் பொறுப்பு நீண்டகால பொறுப்பொன்றாக 2017 ஆம் ஆண்டில் கணக்குகளில் பதியப்பட்டிருந்தமையும் இதற்கு பிரதான காரணங்களாக விளங்கின. மீளாய்வாண்டில் நடைமுறை விகிதாசாரம் எண்ணிக்கைரீதியாக வளர்ச்சியடைந்திருந்த போதிலும், காசு மற்றும் வங்கி மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 24,924,059 ஆல் குறைவடைந்தமையினால் குறுங்காலத்தில் நிறுவனத்தின் நடப்பு பொறுப்புக்களை கொடுத்து தீர்க்கும் ஆற்றல் பலவீனமான மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் விரைவுச் சொத்து விகிதம் 2015, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் முறையே 0.12 , 0.21 மற்றும் 0.49 ஆக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் ரூபா 31,021,865 ஆக இருந்த காசு மற்றும் வங்கி மீதி 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 6,097,806 வரை ரூபா 24,924,059 ஆல் குறைவடைந்திருந்தமையினால் மீளாய்வாண்டு இறுதியளவில் விரைவுச் சொத்து விகிதம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

4 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

**4.1.1. திட்டமிடுதல்**

-----------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ருவரி 17 திகதிய 01/**2014** ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், குறைந்த பட்சம் 03 ஆண்டுகள் பொருட்டு ஒன்றிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும், ஒன்றிணைந்த திட்டம் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ருவரி 17 திகதிய 01/**2014** ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் வியாபார திட்டத்தை அடிப்படையாகக்கொண்டு எதிர்வரும் நிதியாண்டில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வணிக செயற்பாடுகள், வருடாந்த வரவுசெலவுத்திட்டம், வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் மனித வள அபிவிருத்தித் திட்டம் என்பன செயல்நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு குறிக்கோளை எய்துதல் தொடர்பான முன்னேற்றம் மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**4.1.2. செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்**

-----------------------------------------------------

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 29 ஆம் பிரிவுக்கு இணங்க இக்கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 1958 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 09 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் யுத்தம் காரணமாக மூடப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டில் மஹியங்கனை தொழிற்சாலை மட்டும் ரூபா 2,659,720 நட்டம் அடைந்திருந்ததுடன், எரகம, உஸ்வெவ, யடியன மற்றும் பிங்கிரிய ஆகிய 04 தொழிற்சாலைகளில் ஒட்டுமொத்த இலாபம் ரூபா 54,266,008 ஆக இருந்தது.

(ஆ) யடியன மற்றும் பிங்கிரிய தொழிற்சாலைகள் 2016 ஆம் ஆண்டில் முறையே ரூபா 8,806,596 மற்றும் ரூபா 666,821 நட்டம் அடைந்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் அந்நட்டத்தை விஞ்சி பெற்ற இலாபம் முறையே ரூபா 625,689 மற்றும் ரூபா 3,060,579 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 05 தொழிற்சாலைகளின் முடிவு இருப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 75,910,602 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் குறித்த 05 தொழிற்சாலைகளின் முடிவு இருப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 16,556,354 ஆக காணப்பட்டது. அதன்படி, மீளாய்வாண்டில் முடிவு இருப்புக்களின் பெறுமதி மொத்தமாக ரூபா 59,354,248 ஆல் அதிகரித்தல் மஹியங்கனை தொழிற்சாலையின் நட்டம் குறைவடைவதற்கும், ஏனைய 04 தொழிற்சாலைகளின் இலாபம் அதிகரிப்புக்கும் காரணங்களாக விளங்கின.

(ஈ) பிங்கிரிய மற்றும் உஸ்வெவ தொழிற்சாலைகளின் உத்தேச உற்பத்தி இயலளவு முறையே 1,516,000 அலகுகள் மற்றும் 368,000 அலகுகள் ஆவதுடன், உத்தேச உற்பத்தி முறையே 292,232 அலகுகள் மற்றும் 1,114,321 அலகுகள் ஆக காணப்பட்டன. அதன்பிரகாரம், பிங்கிரிய தொழிற்சாலையின் உற்பத்தி நூற்றுக்கு 81 ஆல் குறைந்திருந்ததுடன், உஸ்வெவ தொழிற்சாலையின் உற்பத்தி நூற்றுக்கு 203 ஆல் அதிகரித்திருந்தது.

(உ) மீளாய்வாண்டில் உஸ்வெவ தொழிற்சாலையின் மொத்த உற்பத்தி 1,114,321 அலகுகள் ஆனபோதிலும், மொத்த விற்பனை அளவு 357,155 அலகுகள் ஆகவிருந்தன. அதன்பிரகாரம், உற்பத்தியில் நூற்றுக்கு 32 மட்டுமே விற்பனையாகி இருந்தது.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி விற்பனை வருமானம் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் வருடாந்தம் வளர்ச்சியடைந்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 24,217,593 ஆல் அதாவது நூற்றுக்கு 16.5 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 09 தொழிற்சாலைகளையும் நீண்டகால தனியார் முதலீட்டாளர்களுக்கு வாடகைக்குவிடும் அடிப்படை நோக்குடன் நிறுவனத்தை மீள்கட்டமைக்கும் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு இணங்க, தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை நீக்கப்பட்டு 2010 யூலை 01 ஆம் திகதி முதல் தகுதிவாய்ந்த அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதன்பிரகாரம், 2012 மார்ச் 31 ஆம் திகதி முதல் தன்னிச்சையான நட்டஈட்டு முறையின் கீழ் ஊழியர்களை ஓய்வுபெறச் செய்திருந்த போதிலும், 2018 யூலை 31 ஆம் திகதி வரையில் தொழிற்சாலை எதனையும் வாடகைக்குவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பதுடன், ஒப்பந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 05 தொழிற்சாலைகள் மீளாய்வாண்டினுள் பேணப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டு இறுதியில் முடிவுப்பொருள் இருப்புக்களின் அதிகரிப்பு மொத்தம் ரூபா 59,223,575 ஆக இருந்தது. குறித்த முடிவுப்பொருள் இருப்பு பெறுமதியிலும் ரூபா 33,706,824 அதாவது நூற்றுக்கு 57 முடிவுப்பொருள் இருப்பு உஸ்வெவ தொழிற்சாலையின் உற்பத்திகள் விற்பனையாகாது எஞ்சியிருந்ததுடன், இந்த முடிவுப்பொருள் இருப்புக்களை விற்பனை செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

மாவத்தகம வேஉட ஓட்டுத் தொழிற்சாலை மற்றும் அது அமைந்திருந்த காணியை புதிய கைத்தொழில் செயற்றிட்டம் ஆரம்பிக்கும் முகமாக மூன்று தனியார் நிறுவனங்களிடமிருந்து 03 பிரேரணைகள் எவ்வித செயற்றிட்ட பிரேரணையும் கோராது மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்தது. குறித்த பிரேரணைகளை அடிப்படையாகக்கொண்டு இந்த தொழிற்சாலை கட்டடங்கள் மற்றும் காணியை வாடகைக்குவிடும் செயன்முறையானது கணக்காய்வு சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட 2018 யூலை மாதம் வரையில் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் II ஆம் பகுதி 5 (1) ஆம் பிரிவுக்கேற்ப உரியவாறு பணிக்கொடை கொடுப்பனவுகளை கணித்து உரிய காலத்தினுள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் "சீ" அறிக்கை அனுப்புதல் தாமதமாகியமையினால் மீளாய்வாண்டில் ரூபா 145,110 மிகைக் கட்டணமொன்றை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) அரச தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் 2017 பெப்ருவரி 16 ஆம் திகதிய கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு அரசியல் காரணங்களின் பேரில் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்த இரு ஊழியர்களுக்கு பரிகாரம் வழங்கும் முகமாக மொத்தம் ரூபா 500,000 நட்டஈட்டுத் தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

மஹியங்கனை தொழிற்சாலை காணியில் 15 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடையிலான காலத்திலிருந்து விற்கப்படாமல் தொழிற்சாலை வளாகத்தினுள் குவித்து வைக்கப்பட்டிருந்த ரூபா 719,165 பெறுமதியான செவன விசேட 12,533 ஓடுகள் ஒரே இடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தமையினால் கரைந்ததன் காரணமாக இருப்புக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

**4.6 பதவியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் ஊழியர்கள் தன்னிச்சையான ஓய்வூதிய நட்டஈட்டுத் திட்டத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டிருக்கையில் திறைசேரி அங்கீகாரமின்றி 08 ஊழியர்கள் மீளாய்வாண்டில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மேற்படி சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின்படி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி சகிதம் அமைப்புசார் திட்டமொன்று இருத்தல் வேண்டும் என்பதுடன் இயைபான அமைப்புசார் திட்டத்தையும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியையும் அரச தொழில்முயற்சி திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டியபோதிலும், 2012 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தை மீள்கட்டமைத்தலின் கீழ் ஊழியர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டு நீக்கியதன் பிற்பாடு அமைப்புசார் திட்டத்தையும் பதவியணியையும் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சின் அமைச்சரின் பதவியணியில் சேவையாற்றும் ஊழியரொருவருக்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 50,000 உம், 2017 ஆம் ஆண்டில் ரூபா 340,000 உம் ஆக மொத்தமாக ரூபா 390,000 சம்பளங்கள் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்தன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செலாற்ற வேண்டியிருப்பதுடன், மீளாய்வாண்டுக்கு ஏற்படையதாக கூட்டுத்தாபனம் தமது விடயப்பரப்புக்கு கீழான பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதுபற்றி அறிந்திருக்கவில்லை.

(ஆ) மேற்படி 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கூட்டுத்தாபனம் அறிந்திராத காரணத்தினால் அதன் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களும் இலக்குகளின்படி அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்காமை

2003 யூன் 02 திகதிய பீஈடி/**12** ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக் கூற்றுக்களையும் வரைவு வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2018 யூலை 19 ஆம் திகதியே கணக்காய்வு பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டல்நெறியின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டு பொருட்டான பெறுகைத் திட்டமொன்று கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அத்தகைய திட்டமொன்றை தயாரிக்காது மொத்தம் ரூபா 1,166,207 பெறுமதியான மூலதனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தேசிய பெறுகை வழிகாட்டல்நெறிக்கு இணங்க முறையான பெறுகை செயன்முறையை கடைப்பிடிக்காமல் பிரதேச 04 விலைகளைப் பெற்றுக்கொண்டு எரகம தொழிற்சாலைக்குச் சொந்தமான 50 ஏக்கர் வயல் காணி 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி முதல் 2018 மார்ச் 15 ஆம் திகதி வரையிலான காலத்திற்கு ரூபா 565,000 க்கு ஒரு நபருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

### 6.3 வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடு

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 திகதிய பீஈடி/**12** ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டு பொருட்டான வரவுசெலவுத்திட்டமொன்று கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

2003 யூன் 02 திகதிய பீஈடி/**12** ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை மும்மொழிகளில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான வருடாந்த அறிக்கைகள் 2018 யூலை 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தகுதிவாய்ந்த அலுவலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | கணக்குப் பிரிவு அலுவல்கள் பொருட்டு நிரந்தர பதவியினர்களில் கணக்காளர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்தாமை, முறையாள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையியலை நிறுவனத்தினுள் செயற்படுத்தாமை. |
| (ஆ) பதவியினர் நிருவாகம் | தன்னிச்சையான ஓய்வூதிய நட்டஈட்டுத் திட்டத்தை செயற்படுத்தியதன் பிற்பாடு அங்கீகாரமின்றி பதவியினரை ஆட்சேர்த்தல். |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | தொழிற்சாலைகளை வாடகைக்குவிடும் செயன்முறையை செயற்படுத்தாமை. |